(ஊ) திருநெல்வேலி மாவட்டம் அம்பை வட்டத்தில் சாலைகள் மேம்பாட்டுப் பணி.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், அம்பை வட்டம் வெங்கட்டரெங்கபுரம் கிராமச் சாலையும், மேலச்சடையமான் குளம், கீழச்சடையமான்குளம் இணைப்புச் சாலையும் சரி யில்லாத காரணத்தினால் பாதசாரிகளும், பஸ் போக்குவரத்தும் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எ. அருணாசலம்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

(1) வெங்கட்டரெங்கபுரம் சாலை:

இச்சாலைக்கான மேம்பாட்டுப் பணி 1982-83 ஆம் ஆண்டின் பேருந்து வழித்தட ஏற்புத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றன மொத்த வேலையும் விரைவில் முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

(2) மேலச்சடையமான்குளம்—கீழச்சடையமான்குளம் சாலை:

இச்சாலையில் தற்போது பேருந்துகள் சென்று கொண்டிருக் கின்றன. இச்சாலையினை தார்சாலையாக மேம்பாடு செய்யும் பணி ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு தற்போது ரூ. 95,000 மதிப்பீட்டில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. கருங்கல் கப்பி பாத்தும் பணி முடிக்கப்பட்டு தார் பரத்த தேவையான சிறுஞ்ஜல்லி கற்கள் சேகரம் நடைபெற்று வருகிறது. தார் பாத்தும் பணி 30—4—1987-க்குள் முடிக்கப் பட்டுவிடும் என எதிபார்க்கப்படுகிறது.

(எ) கோவையில் சிலர் கள்ளச் சாராயம் அருந்தி மரணம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர் களுக்குப் பதிலாக திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் அதனை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, "கோவை, பூ மார்க்கெட் அருகே தேவாங்கர்பேட்டையில் கள்ளச்சாராயம் குடித்து 6 பேர் மரணம் அடைந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை நான் வைக்கிறேன் :

**அறிக்கை.**

கோயம்புத்தூர் நகரில் தேவாங்கர் பேட்டையில், சிரியன்சர்ச் ரோட்டில் 16/56 இலக்கமிட்ட வீட்டில் வசித்த திரு. அருணகிரி, வயது 45 (த/பெ. ஜெகந்நாத செட்டியார்) என்பவர் 24—2—1987 ஆம் தேதி அன்று மெதில் ஆல்கஹாலுடன் கூடிய எதில் ஆல்கஹாலை அருந்தி மரணமடைந்துள்ளார். இது சம்பந்தமாக 24—2—1987 ஆம் தேதி பிற்பகல் கோயம்புத்தூர் ஆர். எஸ். புரம் காவல் நிலையத்தில் குற்ற எண் 218/87 குற்றவியல் நடைமுறைத் தொகுப்புப் பிரிவு 174-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

2. மேற்குறிப்பிட்டுள்ள வழக்கின் விசாரணையின்போது மேலும் கோயம்புத்தூரில் தேவாங்கர்பேட்டை, மேட்டுப்பாளையம் ரோட்டுப் பகுதி, ராம்நகர் ஆகிய பகுதிகளிலும் 23—2—1987 மற்றும் 24—2—1987 தேதிகளில் கீழ்க்கண்ட ஐந்து நபர்கள் இறந்ததாகத் தெரிய வந்தது.

(1) கணேஷ் குமார்.

(2) நாகேஷ் (என்கின்ற) சண்முகானந்தம்.

(3) மாணிக்கம்.

(4) ஜெயகாந்தன்.

(5) சின்னக்கண்ணன் (என்கின்ற) சிட்டுச்சாமி.

இவர்களின் மரணம் பற்றி அவர்களது உறவினர்களை அணுகி விசாரித்தபோது மேற்படி ஐந்து நபர்களும் எவ்வித சாராயமும் சாப்பிட்டதால் இறக்கவில்லை என்றும், இயற்கையான மரணம் தான் அடைந்துள்ளனர் என்றும் தெரிய வந்தது. மேலும் மயான அலுவலகங்களிலுள்ள சான்றாவணங்களில் மேலே குறிப்பிடப்

பட்டுள்ள ஐவரும் இயற்கையாகத்தான் மரணம் அடைந்துள்ளனர் என்று பதிவாகியுள்ளது. இவர்களின் மரணம் குறித்து எவ்விதப் புகார்களையும் காவல் நிலையத்தில் யாரும் தாக்கல் செய்யவில்லை.

3. மேற்குறிப்பிட்டுள்ள தகவல்களினால் கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதுபோல கோயம்புத்தூர் பூ மார்க்கெட் அருகே தேவாங்கர் பேட்டையில் கள்ளச்சாராயம் குடித்து 6 பேர் மரணம் அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது உண்மைக்குப் புறம்பானதாகும்.

## (ஏ) திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் ஆலயப் பணியாளர் போராட்டம்.

* திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி, கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்ட திருக்கோயில் பணியாளர்கள் சங்க உறுப்பினர்கள் கடந்த 9—3—1987 முதல் நடத்தி வரும் 'அறப் போராட்டம்' குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை நான் வைக்கிறேன்:

### அறிக்கை.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் மற்றும் இதர ஆலயப் பணியாளர்கள் ஊதிய உயர்வு, அகவிலைப்படி மற்றும் கருணைத் தொகை வேண்டி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

2. இச்சங்கம் அரசினால் அங்கீகாரம் பெறப்பட்டதன்று. மேலும், ஆலயப் பணியாளர்களின் பணி நியமனத்திற்கான கல்வித் தகுதிகள் ஆகியவை அரசுப் பணியாளர்களைப் போன்று வரையறுக்கப்பட்டவை அல்ல. மேலும் அவர்களது பணியின் தன்மையும், அரசு பணியாளரைப் போன்றவையல்ல. மேலும் அவர்களது கல்வித் தகுதி, பணியின் தரம் வெகுவாக அரசுப் பணியாளர்களிடமிருந்து மாறுபட்டுள்ளது. ஆனால் ஆலய ஊழியர்கள் வேறு பல சலுகைகள் பெறுகின்றனர். உதாரணமாக